# தாரா-தாரிணி தேவிகள்

## சாந்திப்பிரியா



ஒரிசா மானிலத்தில் சக்தி வழிபாட்டு ஆலயங்கள் மற்றும் தந்திரக் கலைகளை உள்ளடக்கிய பல ஆலயங்கள் உள்ளன என்பதின் காரணம் ஒரு காலத்தில் அங்கு அதிக அளவில் பேய், பூதங்கள் மற்றும் அமானுஷ்ய ஆவிகளை நம்பி மாய மந்திரம் சார்ந்த தந்திரக் கலைகளை செய்து வந்த மலைவாழ் மக்கள் குடி இருந்ததுதான். அதில் ஒன்றுதான் தாரா தாரிணி என்ற இரு தேவிகளுக்கும் எழுந்த ஆலயம் ஆகும். சரித்திர ஆய்வாளர்களின்படியும், வரலாற்று செய்திகளின்படியும் தெரிவது

என்ன என்றால் மலை மீதுள்ள இந்த ஆலயம் ஒரு சக்தி பீடம் என்பதில் ஐயம் இல்லை. மேலும் ஒரு கால கட்டத்தில், அதாவது பௌத்த மதத்தை தழுவிய அசோகா மன்னன் இந்த பகுதிகளின் மன்னனாக இருந்தபோது மகாமாய புத்தப் பிரிவினர் தாரா தேவியை முதன்மை தேவியாக போற்றி தந்திரக் கலைகளைக் கற்றறியத் துவங்கிய கால கட்டத்தில் இந்த ஆலயம் இருந்தது எனவும் அதன் பின்னரே அது இந்துக்களின் ஆலயம் ஆயிற்று என்றும் கூறப்படுகின்றது.

அந்த ஆலயத்தில் இரண்டு தேவிகள் உள்ளனர். தக்ஷயாகத்தில் தற்கொலை செய்து கொண்ட பார்வதி தேவியின் உடலை சிவபெருமான் தூக்கிக் கொண்டு சென்றபோது சிவபெருமானின் கோபத்தை தணிக்க அவளது உடலை 51 துண்டுகளாக விஷ்ணு பகவான் வெட்டி எறிந்தபோது இங்கு விழுந்த மார்பகங்கள் மீது இருந்து தோன்றியவர்கள் இந்த இரு தேவைகளும் ஆவர். இங்கு நிலவும் கிராமியக் கதையின் கூற்றின்படி பார்வதி தேவியின் உடலை துண்டு துண்டாக வெட்டியது விஷ்ணு மட்டுமல்ல, பிரம்மா, விஷ்ணு மற்றும் சனி ஆகிய மூவருமே இறந்து கிடந்த பார்வதி தேவியின் உடலுக்குள் புகுந்து கொண்டு அவளுடைய ஒவ்வொரு பகுதியையும் வெட்டி எறிந்தார்களாம். ஆனால் அனைத்து புராணங்களிலும் கூறப்படும் கதை என்ன என்றால் விஷ்ணு பகவானே, தனது சக்ராயுதத்தை ஏவி பார்வதி தேவியின் உடலை 51 துண்டுகளாக வெட்டி இருந்தாராம்.

ஒடிசாவின் பெர்ஹாம்பூர் நகரத்திலிருந்து 30 கி.மீ தூரத்தில் உள்ள ருஷிகுல்யா ஆற்றின் தென் கரையில் உள்ள புனித குமரி மலை உச்சியில் தாரா மற்றும் தாரிணி தேவிகளின் தங்குமிடமாக

கருதப்படும் இடத்தில் கல்லினால் கட்டப்பட்ட அழகான இந்த ஆலயம் உள்ளது. அங்குள்ள இரண்டு பெரிய பாறை கற்களை பெண் தெய்வங்களாக தோற்றம் அளிக்கும் விதத்தில் மாற்றி அமைத்து தங்கம் மற்றும் வெள்ளி ஆபரணங்களை ஒட்டி பெண் தெய்வம் போல வைத்து அவற்றையே தாரா மற்றும் தாரிணி தேவிகளாக வணங்கி வருகின்றார்கள். பெரிய தேவியின் பெயர் தாரா தேவி, சிறியவ தேவியின் பெயர் தாரிணி தேவையாகும். மேலும் அவளது உண்மையான உருவத்தைக் காட்டும் விதத்தில் இரண்டு முகங்கள் பித்தளை உலோகத்தில் செய்யப்பட்டு அந்த இரண்டு பாறை உருவங்களும் இடையே வைக்கப்பட்டு உள்ளன. அவை இரண்டையுமே உற்சவ மூர்த்திகள் எனக் கூறுகின்றார்கள். பழங்காலத்தில் இருந்தே அந்த தேவிகளின் வழிபாடு இங்கு இருந்துள்ளது. மலையின் உயரம் சுமார் 708 அடி. தாரா தாரிணி மலை என்று கூறப்படும் இந்த மலை இயற்கை அழகினால் சூழப்பட்டுள்ளது. இந்த ஆலயத்துக்கு செல்ல முன்புறத்தில் 999 படிகள் உள்ளன. மேலும் ஆலயத்துக்கு செல்பவர்கள் வாகனத்தில் பயணிக்க நன்கு அமைக்கப்பட்ட சாலையும் உள்ளது.

இந்த மலையிலிருந்து சில கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது கலிங்கா நகரின் கடல் பகுதி. ஒரு காலத்தில் ருஷிகுல்யா நதி வணிகத்திற்கு ஏற்ற நதி என்பதாக நம்பிக்கை இருந்ததினால் மாலுமிகள் தங்கள் கடல் பயணத்தைத் தொடங்குவதற்கு முன்பு தாரா தேவியை வணங்கி வந்துள்ளார்கள். கடல்சார் நடவடிக்கைகளில் ஈடுபட்டு இருந்த இந்த பிராந்திய மக்களிடையே தாரா தேவியை வணங்கி துதிப்பது ஒரு நடைமுறையாக இருந்து வந்துள்ளது.

நாட்டுப்புறக் கதைகளில் ஒன்று தேவியின் மகிமையை இப்படியாக கூறுகின்றது. ஒருமுறை இந்த பகுதியில் தெய்வீக அற்புதங்களைச் செய்த இரண்டு சிறுமிகள் வாழ்ந்து வந்தார்கள். ஆகவே அங்கிருந்த மக்கள் அவர்களை தெய்வீக அவதாரங்கள் என்று நம்பினார்கள். அவர்கள் இருவருமே அந்தணர் ஒருவரால் வளர்க்கப்பட்டனர். அவருக்கு அந்த தேவியே கனவில் தோன்றி தனக்கு ஒரு ஆலயம் அமைக்குமாறு கூற அவரும் அந்த தேவிகள் இருவருக்கும் மலை மீது இந்த ஆலயத்தை அமைத்தார்.

மார்ச் முதல் ஏப்ரல் வரையிலான பண்டிகை காலங்களில், ஐந்து முதல் ஆறு லட்சத்திற்கும் அதிகமானோர் இந்த ஆலயத்துக்கு வருகை தருகின்றனர். இருபதாம் நூற்றாண்டுக்கு முன்னர் அந்த ஆலயத்தில் மிருக பலி தரப்பட்டு வந்துள்ளது. இருப்பினும் இப்போது அமிருக பாலி தடை செய்யப்பட்டுள்ளது. தாந்த்ரீக சாதனாக்களை செய்வதற்கான ஒரு நல்ல நாளாகக் கருதப்படுவதால், ஒவ்வொரு மாதமும் சங்கராந்தி நாளில் சிறப்பு பூஜைகள் நடத்தப்படுகின்றன. பக்தர்கள் தங்கள் முதல் தலைமுடியை இந்த ஆலயத்திற்கு தமது காணிக்கையாக வழங்குகின்றார்கள்.(ஒரு குழந்தை பிறந்த பிறகு முதல் முறையாக முடியை மொட்டையடித்து விடுகிறார்கள். இது இந்தியில் முண்டன் விழா என்று அழைக்கப்படுகிறது). ஆலய வளாகத்திற்குள் திருமணங்கள் மற்றும் பூணூல்அணிவிக்கும் சடங்குகள் நடத்த அனுமதிக்கப்படுகிறது.

# Tara Tarini Temple

## Santhipriya



Odisha (earlier called as Orissa) is known for temples of Sakthi Pitas and temples tantric in nature because at one period of time it was inhabited by tribes who indulged in occult practices and believed in spirits, Ghosts and unnatural souls. One such temple has been the temple for Goddesses Tara and Tarini, which is one of the four most important Sakthi Pitas in India. From the historical evidences and fragment of various legends and folklores, one fact becomes clear. The Goddess Tara-Tarini temple established on this hill top is one of the ancient Shakta Pitha of Orissa. Some theories suggest that this place may have been the Buddhist Tantra Pitha with the worship of Tara, who was

originally the primordial deity of the Mahayana Buddhist sect, and later turned into Sakthi Pita because this area was once under the rule of Emperor Ashoka who converted to Buddhism. But there are no historical references to authenticate it.

Both the two Goddesses enshrined there are believed to have manifested from the breasts of the slain Goddess Parvathi whose dead body was cut to 51 parts by Lord Vishnu to appease the anger of Lord Shiva at the end of Daksha Yagna whose story is widely told in Puranic stories. It is in slight variation with the locally told folklores which tells that it was not Lord Vishnu who alone cut the body of Goddess Parvathi into pieces, but was enacted jointly by Lord Brahma, Lord Vishnu and Lord Sani all of whom entered into the corpse of Sati- Goddess Parvathi and disposed the body part by part.

Called locally as Goddesses Tara Tarini Shrine, it is situated on the holy Kumari hills on the south bank of River Rushikulya at a distance of 30 km from Berhampur city in Odisha. At the hill top is this beautiful stone temple considered to be the abode of Goddesses Tara and Tarini. Two stones have been converted to look like female human face (anthropomorphized) by affixing gold and silver ornaments which are actually the Goddesses Tara and Tarini. The eldest in them is called Goddess Tara Devi and the younger as Goddess Tarini Devi. Two fully molded beautiful brass heads have also been kept as the real appearances of those Devis. In between them are placed two fully

celebrated and beautiful brass heads as their Utsava Vigraha. Worship at this important center of Shakta cult has been continuing since time immemorial. The height of the hill is approximately 708 ft. The hill is popularly known as Goddess Tara Tarini Hill and is surrounded by natural beauty. One has to climb over 999 steps on the front side of the hill leading to the temple and also a well laid road for travelling by vehicle to reach at the temple is available.

The maritime history of Kalinga which is less than few kilometers from this hill also suggest the worship of Goddess Tara by the sailors before launching their sea voyage. Once upon a time river Rushikulya was conducive to navigation and probably the worship of Goddess Tara before launching their sea voyage has been a practice among the people of this region who were involved in maritime activities.

One of the folklore tell the glory of the Goddess thus. Once there lived two little girls who were performing divine miracles in that area so as to make everyone believe that they were divine incarnates. They were brought up by a foster father who was a Brahmin and in due course of time, by the orders of Goddesses Tara and Tarini in his dream, established the Shrine at the hill top in a temple for daily worship.

During the festival period from March to April, over five to six lakh people visit this temple. Animal sacrifices were made in that temple before the twentieth century, however it has been stopped and banned now. Special pujas are held every month on the day of Sankranti as the day is considered to be an auspicious day for performing tantric sadhanas. Devotees offer their first hair as mark of obedience to the God. (Shaving off the hair for the first time after a child is born. It is called Mundan ceremony in Hindi). Weddings and thread wearing ceremonies are also allowed to be performed inside the temple premises.